கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 23
ஆனி 17 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## வாழ்க்கைத் துன்பங்களை அகற்றுதல். மாத்திரம் போதாது

சென்ற சிலவருடங்களாக வேதப் பரப்புதல்வேலை மந்தநிலை அடைந்துவிட்டதற்கு வேதப்பரப்புதல் சபைத்தலைவர் கருதினல் ரொசி அடிகளார் மக்கள்மத்தியில் தோன்றியிருக்கும் ஒருதப்பபிப்பிராயத்தைக் காரணமாகச்சுட்டிக் காட்டியிருக்கின்றார். "வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவமக்கள் உலகில் வாழ்க்கைத்துன்பங்களை அகற்றுவதில் துரித முயற்சிகள் கைக்கொள்ள வேண்டுமென்பதை மிகவற்புறுத்தியிருப்பதால் இத்துடன் பலர் நின்றுவிடுகின்றார்கள். ஆனால் இவ்வாறு மக்களில் கருணைகொண்டு முயற்சி எடுப்பதற்குக் கிறீஸ்தவசமய அறிவுமிக அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே, கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல் அவசியமற்ற செயல்எனக்கொள்வதுபிழையாகும். இத்தப்பபிப்பிராயத்தை நாம் எவ்வளவு விரைவாக அகற்றிவிடுவோமோ அவ்வளவுக்கு மனிதவாழ்விலடங்கிய துன்பங்களும் விரைவாக அகற்றப்படும்" என்றார் அடிகளார்.

### "இவ்வுலகம் தற்செயலாகத் தோன்றிய பொருளல்ல" —விண்வெளி வீரர்

சந்திரனை முதன்முதல் வலம்வந்த மனிதர் அடங்கிய கலத்தின் தலைவராகிய அமெரிக்கதேச பிறுங் போர்மன் என்பவர் அத்தருணத்தில் விண்வெளியிலிருந்து தான் குறிப்பிட்ட விபிலியவாக்கியங்கள்பற்றி தனக்கு எழுதப்பட்ட பலகடிதங்களைப் பற்றிக்குறிப்பிட்டார். இவ்வுலகம் தற்செயலாகத் தோன்றிவிட்ட ஒரு பொருள் அல்லவென்பதற்கும் வெண்வெளியில் காணப்படும் நுண்மைகள் விபிலிய நூலில் உலக படைப்பைப்பற்றிக் கூறப்பட்டிருப்பனவற்றை உறுதிப் படுத்துகின்றனவென்று அவர் கூறியிருக்கின்றார்.

## வறியவர்களுக்காக எதையும் வரவேற்கிறேன்

தென்அமெரிக்கமேற்றிராணியார் ஒருவராகிய சேர்கியோ மென்டெஸ் அடிகளார் வறியவர்கள் முன்னேற்றத்துக்காக எத்தடைகளையும் பொருட்படுத்தாது செயலாற்றுபவர். சில வாரங்களுக்குமுன் அவர் சில்லிதேசத்தில் நடந்த சமதர்மக் கொள்கையாளரின் கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அவர் தமது நாடு திரும்பின போது விமான நிலையத்தில் அவரது போக்கை விரும்பாத ஒருவன் "வானிஸ்" கரைத்திருந்த நிறைந்த வாளியொன்றை அவர்மீது வீசிவிட்டான். "வறியவர்களுக்காக எதையும் வரவேற்கிறேன்" என்று புன்முறுவலோடு தன்இல்லம் சென்றார். மாக்சியம் அல்லாத சமதர்மக் கொள்கையே தென் அமெரிக்க வறியமக்களுக்கு வழிகாட்டும் என்பதில் அவருக்கு நம்பிக்கையுண்டு.

### மெக்சிக்கோ முதற்கருதினல் காலமானார்

மெக்சிக்கோதேச குவாடலா ஜெஹுபிரியின் அதிமேற்றிராணியார் கறிபி தம்து 83 ஆம் வயதில் சென்ற வாரம் காலமாயினார். இவர் 1958-ம் ஆண்டு 23-ம் அருளப்ப பாப்பரசினால் கருதினலாய் நியமிக்கப்பட்டார். இவரதுமறைவினால் கருதினல் குழுவினரின் தொகை 118 ஆகிவிட்டது. 44 தேசங்களிலிருந்து வரும் இக்கருதினல்மாரில் 73 பேர் ஐரோப்பியர்; 14 பேர் லத்தீன் அமெரிக்கர்; 13பேர் வட அமெரிக்கர்; 9பேர் ஆசியர்; 7பேர் ஆபிரிக்கர். 2பேர் ஓசானியாவினர்.

### அன்னை தெரேசாவுக்கு நேரு பரிசு

5,300 ஆங்கிலபவுன் பெறுமதியான நேருபரிசு ஜவகர்லால்நேருவின் நினைவுக்காக இந்திய அரசாங்கத்தால் வருடந்தோறும் இந்தியாவில் விசேஷ சமூகசேவை புரிபவருக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் அது அன்னைதெரேசாவுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அன்னை தெரேசா இத்தகைய பல பரிசுகள் பல தேசங்களிலும் பெற்றிருக்கிறார். இப் பரிசுப் பணங்கள் யாவும் சமூகசேவைக்கே திரும்பவும் தாயாரால் செலவு செய்யப்படுகின்றன.

### குருவானவர் கூட்டுத்தாபன தலைவர்

தற்போது மாறவெலமகா வித்தியாலய தலைவரான வணக்கத்துக்குரிய அலக்சாந்தர் பெர்னாந்து சுவாமியார் சிலாப முழுப்பிரிவிலுமுள்ள மீன்பிடிச் சங்கங்கள் இணைக்கப் பட்டிருக்கும் சிலாப மீன்பிடிக்கூட்டுத்தாபனத்துக்குத் தலைவராக அரசாங்கத்தினரால் நியமிக்கப் பட்டிருக்கிறார். இத்தகைய அரசாங்க நியமனம் பெற்ற முதற் கத்தோலிக்க குரு இவரே. இந்நியமனம் இக் குருவானவரின் குணவிசேஷங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

## ஸ்ரீலங்கா கத்தோலிக்க கல்விப் பரிபாலன சபை

இப்புதிய நாமதேயத்துடன், இந்நாட்டு கத்தோலிக்க கல்விசம்பந்தமான சகல கருமங்களையும் பரிபாலித்துவந்த முன்னாள் இலங்கைக் கத்தோலிக்க கல்விச்சபை சென்றமாத கூட்டத்தில் முடிவு செய்து அதற்கான அமைப்புத் திட்டத்தையும் தயாரித்து அதைத்தேசிய ஆயர்சபை மன்றத்தின் அனுமதிக்குச் சமர்ப்பித்திருக்கின்றது. சர்வகலாசாலைப் படிப்பு, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கல்வி, தனியார் பாடசாலைகள், பொதுக்கல்வியின்பின் நடத்தப்பட்டுவரும் தொழிற்கல்விச் சாலைகளாகியவற்றுடன் சம்பந்தப்பட்டகருமங்கள்யாவும் இப்பரிபாலன சபையின் கவனத்துக்குரியன. கல்வி சம்பந்தமாக ஏற்படும் பிணக்குகள் யாவும் கத். கொள்கைகளின் பின்னணியில் ஆராயப்பட்டு இக்குழுவினரினால் தேசிய ஆயர்சபையின் முடிவுக்கு அனுப்பப்பட அதன் அமைப்புச் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

---

யாழ். மேற்றிராசனத்தில்
25-6-72 ஞாயிறு
**புனித இராயப்பர் சபைத் தினம்**

## குருமார் எங்கிருந்து வருகின்றனர்?

எமது குருமாரை உருவாக்குகின்ற குருமடங்களைக் கட்டியெழுப்புவதும் அவற்றைப் பரிபாலித்து வருவதும் பாப்பரசரின் சபையான அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையின் பணிகள் என்பதை நீங்கள் அறிவீர்களா? வேதபோதகநாடுகளில் — எமது நாட்டிலும் தான் இப்பணி நடைபெறுகிறது. ஆபிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்னும் பாகங்களிலுள்ள பல்வேறு நாடுகளில் உள்ள 85 பெரிய குருமடங்களும் 385 சிறிய குருமடங்களும் கட்டுவதற்கு இச்சபை உதவி புரிந்தது. மேற்றிராசன குருமடங்களை மட்டுமல்ல பல்வேறு துறவற சபைகளின் குருமடங்களை அமைப்பதற்கும் இச்சபை துணை புரிந்திருக்கிறது.

1970 — 71 ஆண்டில் 40369 சிறிய குருமட மாணவரும், 7712 பெரிய குருமட மாணவரும் ஏறக்குறைய முழுமையாக இச்சபையினால் தாபரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். எமது இன்றைய ஆயர்களும் இக்குருமடங்களினால் உருவாக்கப்பட்டவர்களே.

பிரான்சு தேசத்தில்1889-ம் ஆண்டு நிறுவப்பட்ட அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையானது இருவிதத்தில் செயற்படுகின்றது. இவை மறை பரப்பப்படும் நாடுகளிலுள்ள குருமாணவருக்கு உதவிநிதி அளிப்பதும், குருமடங்களைக்கட்டி அவற்றைத் தாபரிக்க உதவுவதுமாகும். இச்சபையின் உதவியால் நூற்றுக்கணக்கான குருமடங்கள் நிறுவப்பட்டன. அவற்றில் ஆயிரக்கணக்கான குருமார் பயிற்றப்பட்டனர்.

இச்சபை விசுவாசப் பரப்புதல் சபையைப் போலவே 54 நாடுகளில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் நிதி சேகரிப்பதற்கும் மக்களை இக்கருத்துக்காகச் செபம் செய்யத் தூண்டுவதற்கும் ஒரு தேசிய அலுவலகம் இருந்து வருகிறது.

### ஒவ்வொரு நாட்டுக்கும் அநேக குருக்கள் :

ஆண்டவர் பீடத்தின்முன் செல்வேன். ஆனால்... குருவாக விரும்பும் இளைஞனுக்கு எத்தனையோ இடையூறுகள் உண்டு. ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் சொந்தக் குருக்கள் இருக்க வேண்டுமென்பது திருச்சபையின் திட்டம். இலங்கை மக்களாகிய நாமும் எமது சொந்தக் குருக்கள் பலி நிறைவேற்றுவதையும் தேவதிரவிய அனுமானங்களை அளிப்பதையும் காண விழைகின்றோம்.

உங்களது உதவியின்றி இதைச் சாதிப்பது அரிது. குருத்துவத்தை விருத்தி செய்வதற்குத் தடையாயுள்ளது ஆன்மீகக் குறைபாடல்ல, நிதிக் குறைபாடுதான்.

### நீங்கள் செய்யக்கூடியது:

மறை பரப்பப்படும் நாடுகளில் சுதேச குருக்களைப் பயிற்றுவதற்கு உதவும்படியாக அப்போஸ்தலரான புனித இராயப்பர்சபை ஸ்தாபிக்கப்பட்டது. பரிசுத்த தந்தைக்கு நிதி சேகரிப்பதே அதன் நோக்கம். இந்த நிதியைக் கொண்டே பாப்பரசர், குருக்களைப் பயிற்றுவதற்காகத் தம்மிடம் உதவிகோரும் ஆயர்களுக்கு உதவியளிக்கிறார்.

### ஆனால் நீங்கள் உதவி புரியாவிட்டால் அவர் கரங்கள் வெறுமையாகிவிடும்:

நீங்கள் யாருக்கு உதவினீர்கள் என்பதை அறியாதிருக்கலாம். ஆனால் அக்குருவின் வாய் உங்கள் பெயரை என்றும் உச்சரிக்கும், நீங்கள் இருவரும் ஆண்டவர் பீடத்தண்டை ஒருங்கே செல்வீர்கள்.

---

இப்பணியிற் பங்கு கொள்ள விரும்புகிறீர்களா?

விபரங்களுக்கு உங்கள் மேற்றிராசன இயக்குநருக்கு அல்லது கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதுக.

**தேசிய இயக்குநர்,**
**பாப்பரசரின் வேதபோதக உதவிச் சபைகள்,**
**29, பெரெய்ரா லேன்,**
**கொழும்பு 6.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது ! விற்பனையாகின்றது !!

"லூக்காஸ் சுவிசேஷம்"

(புதிய பதிப்பு) பிரதி விலை: ரூபா 2-50

கிடைக்குமிடம்: மறைக்கல்வி நடுநிலையம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

ஏழைகளைப் போன்ற பணிவுபெற்ற செல்வர்களும், செல்வர்களைப் போன்ற பெருந் தன்மையுள்ள ஏழைகளும் ஆண்டவன் அன்புக்கு உரியவராவர்.

சத்தியவேத பாதுகாவலன்

# ஓர் அறை கூவல்

திருச்சபை வாழ்வுக்கு இன்றியமையாதது குருத்துவம், பலியையும் தேவதிரவிய அனுமானங்களையும் நிறைவேற்றித் திருச்சபையை வளர்ப்பவர் குருக்கள். அவர்களில்லாவிட்டால் விசுவாசப்பயிர் வாடிக்கருகி அழிந்துவிடும்.

உலகெங்கும் போய் நற்செய்தியைப் போதிக்கும்படி கிறிஸ்து கட்டளையிட்டார். அப்போஸ்தலர் எட்டுத்திக்கும் போயினர். கிறிஸ்துவைப் போதித்தனர். விசுவாச வித்தை தாம் போகுமிடமெல்லாம் நாட்டினர். அவ்வித்து முளைத்து, வளர்ந்து, விளைந்து பயன்கொடுத்தது. இதே வரலாறு திருச்சபையின் சரித்திரத்தில் பன்முறை தொடர்ந்து இடம் பெறுகின்றது. புதிய புதிய பிரதேசங்கள் கிறிஸ்துவின் செய்தியைப் பெறுகின்றன. அங்கு விசுவாசம் முதிர்ச்சியடைய அம்மக்கள் மத்தியிற் பல தலைவர்கள் தோன்றுகின்றனர். திருச்சபையின் பெயரால் மக்களை வழி நடத்துகின்றனர். இதுவே திருச்சபையின் திட்டமாகும். ஓவ்வொரு பிரதேசமும் தன் சுயதேவைகளைப் பூர்த்திசெய்து தனக்கேயுரிய முறையில் திருச்சபையின் வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்பது.

முதிர்ச்சி அடைந்த ஒரு கிறிஸ்தவ சமூகத்தில் தேவ அழைத்தல்களுக்கு குறைவிருக்க நியாயமில்லை. எத்தனையோ இளைஞர் இறைவனுக்குத் தொண்டுபுரிய, குருத்துவ வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணிக்க முன்வருவர். ஆயினும் குருத்துவப் பயிற்சி நீண்டதும் செலவுமிக்கதுமாகும். சாதாரணமாக வேதபோதக நாடுகள் பொருளாதாரத்தில் பின்தங்கியவை. அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் ஏழைகள். தமது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்யவே கஷ்டப்படும் மக்கள் தமது புதல்வரைக் குருத்துவ வாழ்வுக்குப் பயிற்ற என்ன செய்வார்கள்? குருமடங்களை நடத்தும் பொறுப்பு பொருளாதார வளம் குன்றிய நாடுகளில் பெரும் பிரச்சினையாகவே இருந்து வந்தது.

இந்நிலைக்குப் பரிகாரம் தேடுவதற்காகவே நிறுவப்பட்டது. அப்போஸ்தலராகிய புனித இராயப்பர் சபை. இரு சகோதரிகளால் 1889-ல் நிறுவப்பட்ட இச்சபை சுதேச குருமாரின் பயிற்சிக்கு நிதியுதவிபுரியும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டதாகும். நிதிப்பற்றாக் குறையால் வளர்ச்சி பெற முடியாமல் திண்டாடிய வேதபோதக நாடுகளுக்கு இச்சபை ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். இச்சபை இல்லாதிருந்தால், இன்று பெரும்பாலான வேதபோதக நாடுகளில் பணிபுரிந்துவரும் சுதேச குருமார் குருத்துவ பதவியையே அடைந்திருக்க முடியாது. இன்று இந்நாடுகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான குருக்கள், நூற்றுக்கணக்கான மேற்றிராணிமார், ஏன், கருதினல்மாருங்கூட இச்சபையின் ஆதரவில் உருவாக்கப்பட்டவர்களே. இலங்கையில் உள்ள குருமடங்களின் செலவில் 75% இச்சபையால் பொறுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சபை தனது நிதியை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறது? உலகெங்கணுமுள்ள தயாள உள்ளம் படைத்த கிறிஸ்தவர்களின் நன்கொடைதான் இச்சபையை இயக்குகின்றது. பொருள் வளமும் தியாகசிந்தையுமுடையோர் ஒரு குருமகனை சுவீகாரம் செய்து அம்மாணவனை பயிற்றும் செலவைப் பொறுக்கக்கூடும். ஆனல் அது எல்லாரும் செய்யக்கூடியதல்ல, நிதிகுறைந்தவர் தமது பரித்தியாகங்களால் சேர்த்த அற்ப தொகையும் கொடுக்கும் இதயத்தின் தன்மைக்கேற்ப பன்மடங்கு பலனளிக்கும். அதுவும் இல்லாதவர் என்ன செய்வது? பணம் கொடுக்க முடியாதவர் இருக்கலாம். ஆனல் செபம் கொடுக்க முடியாதவர் இல்லை. திருச்சபையின் எந்தப் பணிக்கும் நிதி மிக அவசியமாயிருக்கலாம். செபம் அதைவிட அவசியமாகும். உங்களால் கொடுக்க முடிந்தது என்ன? அதை நன்மனத்துடன் உதவுங்கள்.

# புனித இராயப்பர் சபை

## தேசிய இயக்குனரின் கடிதம்:

அன்பர்களே,

இரண்டுநாட்களாக நடந்து அவன் களைத்துப் போயிருந்தான். ஆயினும், அவன் போய்க்கொண்டே இருந்தான். தான் நடந்த தூரத்தையோ பிரயாணத்திற் கழிந்த நேரத்தையோ, தனது பசியையோ களைப்பையோ அவன் பொருட்படுத்தவில்லை. அவன் உள்ளத்தில் மூண்டிருந்த ஓர் அக்கினிச்சுவாலை அவனை இட்டுச் சென்றது. தலைநகரில் உள்ள மேற்றிராணியார் இல்லத்தை அவன் அடைந்தாக வேண்டும். அது இன்னும் வெகு தூரத்தில்தான் இருந்தது. இறைவனது அருள் அவனுக்குத் துணைநின்றல் அவன் பிரயாணத்தைத் தொடர முடியும்.

அகோய் ஓர் ஆபிரிக்க இளைஞன். அவனை நான் நன்கறிவேன். தனது கிராமத்தில் மறைபரப்பிய குருவானவரை அவன் கண்டிருந்தான். அவரை நன்கு அறியவந்தபோது அவரது நற்பண்புகளால் வசீகரிக்கப்பட்டான். பூசையில் பரிசாரகனுகஉதவினுன். அயர்லாந்திலிருந்து மறைபரப்புவதற்காக வந்திருந்த அக்குருவானவரின் பண்புகள்— கனிவுமிக்க அவரது கண்கள், அவரது ஆர்வம், அவரது செபமும் உழைப்பும், தன்னலம் கருதாது அவர் அனைவருக்கும் புரிந்தசேவை, யேசுவின் அன்பைப்பற்றி அவர் எடுத்துக்கூறிய விதம்— இவை அனைத்தும் அவனைக் கவர்ந்தன. "இக் குருவானவர் உண்மையிலேயே இறைவனில் அன்பு பூண்டவர்" என அகோய் எண்ணுவான். இறைவனின் அன்பு கொஞ்சங் கொஞ்சமாக அவனிலும் நிறைந்தது. அவரைப்போல தானும் ஒரு குருவாக விரும்பினுன். இவரைப் போலவே இறைவனுக்கும், அவர் மக்களுக்கும் எங்கும் பணிபுரியவும், இவரைப்போலவே பூசைப்பலி ஒப்புக்கொடுக்கவும், எல்லா மக்களுக்கும் எல்லாமாக இருக்கவும் விரும்பினுன்.

கதையின் ஆரம்பம் இதுதான். ஆனல், இதில் அதிசயம்என்னவென்றல் அகோய் அக் குருவானவரிடம் ஒன்றுமே கூறவில்லை. தன் பெற்றோரிடம் இதைக் கூறியபோது, அவர்கள் தம்வறுமை காரணமாக அவனுக்கு உதவ முடியவில்லை. ஆகவேதான் மேற்றிராணியாரைக் காணும் பொருட்டு இருநூறு மைலுக்கு மேற்பட்ட தூரத்தைக் கால்நடையாகவே மிகவும் கஷ்டத்துடன் கடந்துசென்றுன். மேற்றிராணியார் தன்னை ஏற்று உதவி புரிவார்என அவன் உறுதியாக நம்பினுன்.

இன்று அகோய் இறைவனின் இராச்சியத்துக்காக உன்னத ஊழியம்செய்யும் ஒரு குரு. ஆம், அவன் ஏழை; அவனது பெற்றோரும் ஏழைகள். ஆனல் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள், பரிசுத்த தந்தையிடம் அப்போஸ்தலரான **புனித இராயப்பர் சபை** என ஒருசபை இருக்கிறதென்றும், வேதபோதக நாடுகள்எல்லாவற்றிலுமுள்ள இளைஞர்களுக்குக் குருவாக வருவதற்கு இச்சபை உதவி புரிகிறதென்றும், பொருள் வசதி இல்லாதவருக்கு இச்சபை விசேஷ உதவி புரிகிறதென்றும், அநேக இளைஞர்களைத் தத்தம்நாட்டில் குருத்துவ பதவிக்கு உயர்த்துவதே இச்சபையின் நோக்கமென்றும் அவர்கள் அறியவில்லை.

எனவே, அகோயின் கால்நடைப் பிரயாணம் பயனளித்தது. சில வருடங்களுக்குப் பின் அகோயின் பெற்றோரும் அதே பிரயாணத்தை மேற்கொண்டனர். ஆனல் அவர்களின் உள்ளம் இன்பத்தாற் பூரித்தது. ஏனெனில், தங்கள் மகன் அகோயினுடைய குருப்பட்டத்திற்கு அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். தங்கள் மகன் ஒரு குருவா? ஆம், அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபைக்கு நன்றி.

உலகிலுள்ள வேதபோதக நாடுகள் அனைத்திலும் சுதேச குருமாரை உருவாக்குவதே நோக்கமாகக்கொண்ட இச்சபைக்கு 25-6-72 ஞாயிறு, நாம் செபங்களையும் தியாகங்களையும் அர்ப்பணிக்கப் போகிறேம். இலங்கை மக்களாகிய எமக்கு இத்தினம்விசேஷ நன்றியறிதலுக் குரியதாகும். ஏனெனில், இங்குள்ள ஒவ்வொரு குருவும் ஏதோவிதத்தில் இச்சபைக்குக் கடன்பட்டுள்ளார், எமது நாட்டிலுள்ள ஒவ்வொரு குருமடமும் இச்சபையின் உதவியோடு கட்டப்பட்டதாகும். ஒவ்வொரு குருமடமும் ஓரளவுக்கு இச்சபையின் உதவியுடன்தான் இயங்கிவருகிறது.

ஆகவே, இத்தினத்தில் எமது உள்ளங்களும் கரங்களும் இச்சபையை நோக்கி மலருமா? உங்கள் தான தியாகங்களையும், உங்கள் செபங்களையும் இச்சபைக்குத் தந்துதவுமாறு வேண்டுகின்றேன்.

முதலாவதாக இச்சபையிடமிருந்து எமதுநாடு பெற்றுக் கொண்டவற்றுக்கும், இன்னும் பெறுவனவற்றுக்கும் நன்றிகூறும் முகமாக இதைச் செய்வோமாக. இரண்டாவதாக, வேதபோதக உலகில் குருத்துவ,மறைபரப்புப்பணி செழித்தோங்க நாம் ஒருவழியாக இருப்போம் என்னும் விசுவாச முயற்சியாக இதைச் செய்வோமாக.

எங்கோ உள்ள ஓர் இளைஞன் குருவாகி இறைவனின் அன்புச் செய்தியைத் தன் சொந்த மக்களுக்கு அறிவிப்

(மறுபக்கம் பார்க்கவும்)

## பூசை வழிகாட்டி

### ஆனி—1972.

19. திங்கள்: நாட்பூசை [ப]
**வாசகங்கள்:** 1அர. 21: 1—16
மத். 5: 38—42

20. செவ்வாய்: நாட்பூசை [ப]
**வாசகங்கள்:** 1அர. 21: 17—29
மத். 5: 43—48

21. புதன்: புனித ஞானப்பிரகாசியார் [வெ]
**வாசகங்கள்:** 2அர. 2: 1, 6—14
மத். 6: 1—6, 16—18

22. வியாழன். நாட்பூசை [ப]
**வாசகங்கள்:** சீரா. 48: 1—14
மத். 6: 7—15

23. வெள்ளி: நாட்பூசை [ப]
**வாசகங்கள்:** 2அர. 11: 1—4, 9—18, 20
மத். 6: 19—23

24. சனி: புனிதஸ்நாபக அருளப். பிறப்பு [வெ]
**வாசகங்கள்:** இசை. 49: 1—6
அப் பணி. 13: 22—26
லூக். 1: 57—66, 80

25. ஞாயிறு: ஆண்டின் 12ஆம் ஞா. [ப]
**வாசகங்கள்:** எரேமி. 20: 10—13
உரோ. 5: 12—15, மத். 10: 26—33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்கு நிகர் யார்?

எம் ஈழ தமிழகத்தின் தவப் புதல்வர்களே!
செபமாலை அன்னை அன்புடன் அழைக்கின்றாள்!! எதற்கு?
**தம்முடன் ஒன்றித்து உழைக்க**
இளமை இரத்தத்துடிப்பின் குறிக்கோள் சேவை;
அதுவும்,
"தன்னை முற்றும் பிறருக்காகக் கையளிக்கும்
**செப, தப, அன்பின் தியாகசேவை."**
இவ் "அன்பின் தியாக சேவை" துறவறத்தில்,
யேசுவைப் பின்பற்றுவதில், இல்லையேல்
வேறு எதில் உண்டு?

**தம்பி! "செமாலைமாதா துறவற சபை" என்றால் என்னஎன்று அறிய ஆசையாக இருக்கிறதா? இதில் குருவாக, துறவியாக வர விரும்புகிறாயா? உடனே கீழ்வரும் முகவரிக்கு எழுதவும்.**

* * *

**வண. முதல்வர் சுவாமிகள்,**
செபமாலைத்தாசர் ஆசிரமம்,
தோலகட்டி,
வசாவிளான்.

**பங்குக் குரவர்,**
நற்கருணை நடுநிலையம்,
புனித புவானியார் ஆலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# ஊர்க்குருவியின் செய்திச்சுருள் — சா. பெ.

ரோஜாஅக்கா போனதுக்கப்புறம் எனக்குக் கையும் ஓடவில்லை. காலும்ஓடவில்லை.

இப்படி எத்தனைநாள் இருக்கப் போகிறாய்? போ...போ...ஏதாவது நியூஸ் கொண்டு வா என்று விரட்டினார் எடிட்டர். விர்ரென்று பறந்தேன் விண்ணிலே கீச்...கீச்...

உரோமாபுரி இராயப்பர் மகாலயத்திலே போய் இறங்கினேன். வியாகுலமாதாவின் சிலையைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. ஆறேழு பெரிய மனுஷர்கள் உடைஞ்சதுண்டுகளைப் பொருத்திக் கொண்டிருந்தாங்கள். உடைஞ்ச துண்டுகளை ஒட்டினாலும் உண்மை வடிவம் ஆகுமா?

மைக்கல் ஆஞ்சலோவின் அற்புத படைப்புக்கு இந்தக் கதியா வரவேண்டும் எண்டு துக்கப்பட்டுக்கொண்டே வத்திக்கான் மாளிகையை நோக்கிப் பாய்ந்தேன்.

விவா இல் பாப்பா என்று கத்தினேன் மூச்சுப்பிடித்து. பாப்பாண்டவர் நிமிர்ந்தார். வா வா லங்கா பியூட்டி எண்டு வரவேற்றார். நீங்க 75-ம் வயதிலை ராஜிநாமா பண்ணிவிடப் போறீங்களெண்டு எத்தனை பேர் கவலைப்பட்டாங்க தெரியுமா என்னு போட்டேன் ஒரு போடு. பாப்பாண்டவர் அசந்துவிட்டார்.

அது கிடக்கட்டும் வியாகுல மாதாவிடம் சேட்டை விட்டானே படுபாவி என்றேன் துயரத்தோடு.

இங்கே பார் பியூட்டி. இந்தக் காலத்தில் எத்தனைபேர் தங்கள் தீயநடத்தைகளால் மாதாவின் மனதை வருத்துகிறார்களே. அதற்கு இது எவ்வளவோ மேல்என்றார் மன வருத்தத்துடன்.

மெதுவாக அவரிடமிருந்து தாவிப்பறந்தேன் பக்கிங்காம் மாளிகைக்கு.

எலிசபேத் மகாராணியார் கவலையோடு உட்கார்ந்திருந்தார். தோளில் மெதுவாகத் தாவினேன்.

உங்க பெரியப்பா காதல் பண்ணின படியால் தானே நீங்க இப்போ மகாராணியாய் இருக்கிறீங்க. பிறகேன்கவலை என்றேன் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு.

அதில்லை பியூட்டி என்றார் கண்களைக் கசக்கிக்கொண்டு.

மகாராணியிடமிருந்து நைசாகக் கிளம்பி வின்சர் கோமகளிடம் வந்தேன். ஏக்கத்தோடு என்னைப் பார்த்தார்.

உங்களுக்காக முடிதுறந்த மன்னருக்கு விசுவாசமாக முப்பத்தாறுவருடம் கழித்து விட்டீங்க. நாகரீக யுகத்தில் இது மகத்தான சாதனை என்று விட்டு நேரேபறந்தேன் வெள்ளை மாளிகைக்கு.

ஆழ்ந்த யோசனையிலிருந்தார் நிக்சன், சீனாவுக்குப் போனீங்க, ரஷ்யாவுக்குப் போனீங்க. உலக சமாதானத்துக்காகப் போனீங்களா இல்லை, அடுத்த தேர்தலுக்குப் பிரசாரமா என்றேன்.

அட ராஸ்கலே என்று எழுந்தார்நிக்சன். ஒரேபாய்ச்சலாக விண்ணுக்குத் தாவினேன் இலங்கையை நோக்கி.

## புனித இராயப்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பதற்கு நாம்உதவிபுரிந்தோம் என்ற எண்ணம் எவ்வளவு இன்பகரமானது.

அன்பர்களே, வேதபோதக நாடுகளின் மண்ணிலிருந்து அநேக குருமார்கள் தோன்ற வேண்டுமென்று அப்போஸ்தலரான புனித இராயப்பரின் சபையோடுசேர்ந்து செபியுங்கள், தியாகம் செய்யுங்கள், அர்ப்பணியுங்கள், அன்பு செய்யுங்கள்.

**மன்சிஞ்ஞோர்**
**மணிக் முத்துக்குமாரு,**
தேசிய இயக்குனர்.

# அண்ணனின் அஞ்சல்

அன்புத் தம்பிக்கு;

நலம், நலம் மலர்க. அண்மையில் வெளிவந்த ஜி. சி. ஈ. (சா/த) பரீட்சை முடிவுகள் உனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதாகவும்; அம்மா எதைச் சொன்னாலும் அசட்டையாக; வேண்டா வெறுப்பாக; ஏனோதானோ வென்று வாழ்வதாகவும்; ஏறுமாறாக நிற்பதாகவும் தங்கை நிர்மலா எழுதியிருந்தாள்.

நமது ஊரில் அடிக்கடி சொல்வார்களே; "விதைக்கும் காலத்தில் வீணே இருந்துவிட்டு அறுக்கும் காலத்தில் அரிவாளை எடுத்துச் சென்றால் என்ன பயன்? ஆம் எவ்வளவு பொருள் பொதிந்த வாசகம் என்பதைச் சற்று எண்ணிப்பார். பருவத்தேயல்லா பயிர்செய்யவேண்டும்: படிக்கவேண்டிய காலத்தில் படித்திருந்தால் ஏன் இந்நிலை ஏற்பட்டிருக்கும்?

அடிக்கடி அம்மாவும், அப்பாவும் என்னைப்பற்றிச் சொல்வதை நீ கேட்டிருப்பாய். "சொல்வதைக்கேட்டு ஒழுங்காக நடந்திருந்தால் நல்லநிலையில் இருந்திருக்கலாமே என்று." உண்மைதான்; என்பதை இப்பொழுது உணர்கிறேன்; எனினும் என்ன பயன். காலம்கடந்துவிட்டது. இதுதான் வாழ்க்கையென்று அமைந்துவிட்டது. ஆனால், நீயோ எப்படியும் வாழலாம் என்று எண்ணாதே; ஏனெனில் இப்படித்தான் வாழவேண்டுமென வரையறைசெய்து; வழிவகுத்து வாழ்வதுதான் உண்மை வாழ்க்கை. எப்படியும் வாழலாம் என்று வாழ்வது மிருக வாழ்க்கை.

உன்னையொத்த இளைஞர்களின் வருங்காலம் எப்படி எப்படியெல்லாம் அமையப் போகின்றதென்பதையிட்டு பெற்றாராலோ—ஆசிரியர்களாலோ— அறிஞர்களாலோ—அரசியற் தலைவர்களாலே கூறமுடியாமல் இருக்கின்றது:

ஏனெனில், இளைஞர்களாகிய நீங்கள் வீட்டிற்குமட்டுமன்றி நாட்டிற்கும் பெரும் பிரச்சனையாக—ஏன் உலகிற்கே பெரும் பிரச்சனையாக உள்ளீர்கள் என்பதை எவரும் மறுத்தற்கோ மறைத்தற்கோ இல்லை.

டில்லிக்குப் பாதுஷா என்றாலும், தாய்க்குப் பிள்ளை என்ற பழமொழியை மறந்துவிடாதே. உன்னைக் கண்டித்து நல்வழிப்படுத்துவது அம்மாவின் கடமை மட்டுமன்றி உரிமையும் என்பதை மறந்து விடாதே: ஏனெனில் "வாலிபத்தில் அவனுக்கு அதிகாரங் கொடுக்காதே; அவன் எண்ணங்களை அடையச்செய்யாதே(சர்வப்பிர. 30:11) என்றும் கண்டிக்க மறக்காதே; அவனை நீ பிரம்பால் அடிப்பாய்; அவன் ஆன்மாவையும் நரகத்தினின்று இரட்சிப்பாய் (பழமொழியாகமம் 23, 13, 14)என்றும்வேதாகமம்கூறுகின்றது:

"அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" அல்லவா? இந்தப் பொருள் பொதிந்த வாசகத்தையே "அன்னையும் பிதாவும் பின்னுக்கிடைஞ்சல்"என்ற புதுமொழியாக உன்னையொத்த இளைஞர்கள் மாற்றி வைத்திருப்பதை யான் அறியாதவனல்ல.

தம்பி;

வேதாகமத்தில் தொபியாஸ் என்பவரைப்பற்றி அறிந்திருக்கிறாயா? ஆம் உனக்குச் சிரிப்பு வருகின்றது; யார் இந்தத் தொபியாஸ்? யாருக்குத் தெரிய வேண்டும் இவரை! உண்மைதான்: சினிமா நட்சேத்திரங்களின் பிறந்த நாட்கொண்டு அவர்களின் அந்தரங்க வாழ்க்கைமுதல் அக்குவேறாக ஆணிவேறாகச் சொல்லும் ஆற்றலும் வல்லமையும் உள்ளவன்; பெற்றோர்க்கும்—ஆசிரியர்க்கும் தெரியாமலே; கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்றவைகள் நிறைந்ததுப்பறியும் நவீனங்களை நிறையப்படிப்பவன் அல்லவா நீயும்; உன்னையொத்த இளைஞர்களும். ஏதோ சொல்லவந்து ஏதோ எழுதிக்கொண்டு போகிறேன். வேதாகமத்தில் தொபியாஸ் தன் மகனுக்கு இறுதிக்காலத்தில் என்ன கூறினார் என்பதை எடுத்துப் படித்துப் பார்; அதன்பின் அக்கருத்துக்களைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்பதை எழுது, உனது நண்பர்களுக்கும் அதனை வாசித்துக் காட்டு:

தம்பி;

யேசுநாதர் தம்முடைய தாயை எவ்வளவு தூரம் நேசித்தார் என்பதைச் சற்றுச்சிந்தித்துப்பார். தனது தாயார் எவ்வளவு ஆற்றலும்—வல்லமையும் உடையவளாக இருந்த பொழுதும்; உலகமெலாம் உயர்ந்தேத்திப் புகழக்கூடியவளாக விளங்குவாள் என்பதை அறிந்திருந்தாலும், தாம் சிலுவையிற் தொங்கும் பொழுது தனது தாயாரைப் பேணும் பொறுப்பைத் தனது சீடராகிய அருளப்பரிடம் ஒப்படைக்கவில்லையா?

அடுத்த கடிதத்தில் சந்திப்போம்;

வணக்கம்;

இப்படிக்கு
உனது அன்புள்ள
"அரியண்ணா"

✠

**மரியசூசை பிரான்சிஸ்**
**அவர்களின்**

## 9-ம் வருட நினைவு

**மறைவு: 21-6-1963.**

எனது நேசப் பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய திரு. மரியசூசை பிரான்சிஸ் அவர்கள் அமரத்துவ மெய்திய 9-வது வருடம் 21-6-72-ல் பூர்த்தியாவதால், அன்னாரின் ஆன்ம சாந்தியுற இறக்குவானை அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் 21-6-72-ல் துக்கப்பாடற் பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறுவோர் அவரது ஆன்மா சாந்தியுற வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், பேரர்.

✠

## 31-வது நினைவு நாள்

**திருமதி. செபஸ்தியானுப்பிள்ளை சவிரிமுத்து**

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்.

பிறப்பு: 31-3-1908 இறப்பு: 21-5-1972

**முப்பத்தொரு நாட்கள் "அம்மா"**
**என்று**
**பகலிரவாய் மாய்கிறோம்**
**அன்பாய்ப் சுபம்**
**அன்னையுனைக் காணமல்**
**அங்கும் இங்கும்**
**அலைந்தோடித் திரிகின்றோம்**
**கண்ணீர் வடித்து**
**கனவுலகில் எம் கவலை தீர**
**வருவாய் என்று**
**சென்று திசை பார்க்கின்றோம்**
**அம்மா உனைக் காணும் நாளும்**
**எப்போ வந்திடுமோ**
**தாயே போற்றும் கன்னிமரியாள்**
**பாதம்**
**இருப்பாய் எம்மைக் கண்ணோக்கி**
**மன்றாடு**
**காட்சி காண்போம்"**

எங்கள் இதயத்தாமரையில் என்றும் ஒளி வீசிக்கொண்டிருக்கும் அருட்செல்வமான மனைவியும் என் அருமை மகளும் எங்கள் அன்புத் தாயுமான திருமதி செபஸ்தியானுப்பிள்ளை சவிரிமுத்து அவர்கள் இறைவனின் திருவடி நிழல் எய்திய 31-வது நாள் 20-6-72 பூர்த்தியாகிறபடியால் அன்று தினம் இவரின் ஆத்ம சாந்திக்காக ஊர்காவற்றுறை சென்மேரிஸ் தேவாலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் உறவினர்களும் நண்பர்களும், வண. குருக்கள், சந்நியாசிகள், சங். கன்னியர்களும் இவ்வான்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும் கணவன்: ஞா. சவிரிமுத்து, தாய்: திருமதி சூ. மரியை ஞானப்பு. மக்கள்: திரு. ச. யேம்ஸ், திருமதி. பி. லூர்தம்மா, திருமதி. ம. எலிசபேத்தம்மா, செல்வி. லில்லிமலர் சவிரிமுத்து, செல்வன். தேவதாசன் சவிரிமுத்து. மருமக்கள்: வியாகுலம் பிரான்சிஸ், திருமதி. எலிசபேத் யேம்ஸ் வியாகுலம் டேவிட். பேரப்பிள்ளைகள்: யூஜ்ஜின் ரோசறி, அனிற்றா, ஜெயசீலன், கஸ்ரின் கமிலன், வெஸ்லி ரஞ்சிற். அன்புத்தம்பி: சூசைப்பிள்ளை பிலிப்பையா. அருமைத் தங்கை: திருமதி. மேரி மெற்றில்டா, பிள்ளைகள்.

ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணை இதற்கெதுவோ?

(சென்றவாரத் தொடர்ச்சி)

நமது இரட்சகரின் இரத்தத்தில் நமது ஆன்மாவை இறுதி நேரத்தில் கழுபவர் யார்? குருவே. நல்ல அருள் நிலையில் இல்லாது நமது ஆன்மா மடியுமானல் மீண்டும் அதை ஏற்று அமைதியும் சமாதானமும் அளிக்கக்கூடியவர் யார்? அதுவும் குருவே. இறைவன் அளிக்கும் ஒரு கொடையாவது குருவினுலன்றி எமை அடைவதில்லை."

கடவுளுக்குப்பின் இவ்வுலகில் நமக்கு எல்லாமாய் இருப்பவர் இறைவனின் பிரதிநிதியான குருவே. ஒரு விசாரணைப் பங்கை குருவில்லாமல் இருபது வருடங்கள் விட்டுவிட்டால் அங்கே விக்கிரக ஆராதனையும் மூடநம்பிக்கையும் குடிகொண்டுவிடும். விசுவாசம் அழிந்துவிடும். நிரீச்சுரவாதிகளும் சமயவிரோதிகளும் சமயத்தை அழிக்க முற்படும்போது முதலில் குருமாரைத்தான் தாக்குவார்கள். ஏனெனில் எங்கு குரு இல்லையோ அங்கு பலி இல்லை. எங்கு பலி இல்லையோ அங்கு சமயம் இல்லை" என்று புனித ஜோண் வியான்னி கூறியிருப்பதிலிருந்து குருவின் இன்றியமையாமை நன்கு புலப்படும்.

"குருத்துவத்தால் உலகுக்குப் பேரொளி பாய்ந்தது;
குருவே வாழும் உள்ளத்தின் ஆறுதல்; எந்நக்காலமும்
வாழ்ந்திடும் எழில் நிலையும் குருத்துவமே."

என்ற கருத்துப்பட நாம் பாடும் பாடல் ஒன்று இதன் பெருமையை தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது.

குருத்துவத்தின் மகத்துவம் இத்தகைய தொன்றுனுலும் இந்தக் குருக்களும் மனிதர் தாம் என்பதை இறைமக்களாகிய நாம் பலமுறைகளில் மறந்துவிடுகிறேம். அவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கும் நாம் நமது பங்கையும் அவர்களுக்காகச் செய்கின்றேமா? குறை கூறுவதிலும், பிழை பிடிப்பதிலும், ஆவலாதி அவதூறு பேசுவதிலும் செலவிடும் நேரத்தில் ஒரு பகுதியையாவது குருமாரின் ஆன்ம சரீர நலனுக்காகச் செபிப்பதில் செலவிட்டோமா என்று எம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும். செபமின்றி யாரும் புனிதமடைய முடியாது. செபமும், தபமும் தற்பரித்தியாகமுமே குருமாரைப் பரிசுத்தப்படுத்தும் கருவிகளாகும். முன்னைய நாட்களில் குருமார் தமது அன்றாட அலுவல்களின் பின் பலமணிநேரம் செபத்திலும் தபமுயற்சிகளிலும் செலவிட்டதன் பயனுகவே பலர் புனிதத்தன்மை அடைந்தனர். தாம் எடுக்கும் முயற்சிகளில் சித்தியடைய, கஷ்டங்கள் சஞ்சலங்கள், மனவருத்தங்கள் யாவிலும் ஆறுதலும் தேறுதலும் செபத்தினுலன்றி வேறு எவ்விதத்திலும் அடையமுடியாது.

அலோஷியஸ் ஜே. உவிலிங்கர் என்னும் ஆயர் "அத்தியந்த வறுமையும் எளிமையும் இளங்குருமாரின் ஆரம்பகால சேவையில் கடைப்பிடித்தல் அவசியம். ஏனெனில் உண்மையான பரித்தியாக மனப்பான்மையும் ஆன்மீக அலுவலில் பெருக்கமும் தணியாத வேட்கையும் ஏற்பட இதுவே சிறந்த வழியாகும்" என்று தெரிவிக்கும் அவர் "கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் சிறந்த ஆன்மாக்களை அறுவடை செய்வதில் ஏற்படும் ஆன்மதிருப்தியே குருபடும் வறுமை, துன்பம், எளிமை தற்பரித்தியாகம் என்பவற்றுக்கு கிடைக்கும் சன்மானமாகும்" என நல் உபதேசஞ் செய்கிறர். இந்த உபதேசம் ஆணித்தரமானது; உண்மை பொதிந்ததுங்கூட, இன்றைய இளங்குரவரை உத்தம மாதிரிகைகள் ஆக்க மிகவும் அவசியமானதுமாகும்.

விசுவாசிகளான நாமும் குருமாருக்காகவும், மற்றும், துறவறத்தார் அனைவருக்காகவும் உருக்கமாகச் செபிப்போமாக. சிறிய புஷ்பத்தைப் போல நாம் தனியாகவோ, குடும்பமாகவோ, அன்றேல் சமூகமாகவோ குறிப்பிட்ட குருவானவரை அல்லது துறவிகளை, அன்றேல் சங். சகோதரிகளை ஆன்மீக உறவினராக, அல்லது குடும்ப உறுப்பினராக சுவீகரித்து தினமும் அவர்களுக்காக செபித்து, நமது பாடுகள், பிணிகள், நமது பரித்தியாகங்கள், பூசைப்பலிகள், உட்கொள்ளும் நற்கருணைகள், மற்றும் பக்தி முயற்சிகள் யாவையும் அவர்களுக்காக இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போமானல் சந்தேகமின்றி இவ்வுலகம் வாழ்வதற்குச் சிறந்த இடமாகமாறும்; ஒவ்வொரு ஆன்மாவும் அதிக நன்மையடையும்.

"இருதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ள யேசுவே, உமது குருமாருக்குத் தாழ்ச்சியைத் தாரும்.

பாவிகளின்மேல் இரக்கமும் பொறுமையும் காண்பித்த யேசுவே, உமது குருமாருக்கு பொறுமையையும் சகிப்புத் தன்மையையும தாரும்.

உலகின் பாவங்களுக்காகப் பலியான யேசுவே, உமது குருமாருக்கு பரித்தியாக மனப்பான்மையைத் தாரும்.

சிறுவர்களையும், ஏழைகளையும் நேசித்த யேசுவே, உமது குருமாருக்கு பிறரன்பின் ஆர்வத்தைத் தூண்டியருளும்.

மரியாயே, குருக்களின் இராக்கினியே எங்களுக்காக இறைமகனை மன்றாடி பரிசுத்தமான புனித குருமாரும், துறவறத்தாரும் அதிகரிக்கச் செய்தருளும். ஆமென்.

## புனிதர் வின்சென்ற் டி போல் தருமசபை புனிதர் சூசையப்பர் பந்தி யாழ்ப்பாணம்

## 1971-ம் ஆண்டுக்கான 64-வது வருடாந்த அறிக்கை

(சென்றவாரத் தொடர்ச்சி)

### வறியோர்தினம் :

எமது ஆசனக்கோவிற் பங்குத்தந்தையர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினுல் எமது பங்கிலே வறியோர் தினம் ஒன்று நடாத்தப்பட்டது. அன்று கோவிலிற் சேர்ந்த காணிக்கைப் பணம் நூறு ரூபா அன்றியும் திருப்பலிக் காணிக்கைப்பவனிகளின்போது கிடைக்கும் அநேக பொருட்களை வறியோருக்குப் பகிர்ந்தளிக்குமாறு அவ்வப்போது எமது பங்குத்தந்தையர் பெருந்தன்மையுடன் எமக்கு அனுப்பிவைத்தனர். அவர்களை மிகவும் பாராட்டுகிறேம்.

### எமது வறியவர்கள் :

இருநூற்றிமுப்பது பேரைக் கொண்ட நாற்பத்தைந்து குடும்பங்களுக்கும் பத்து தனி ஆட்களுக்கும் வாரந்தோறும் கிரமமாக உதவி புரிந்தோம். வேறு பல குடும்பங்களுக்கு அவசிய தருண உதவிகளும் புரிந்துள்ளோம். சிறு கைத்தொழில் தொடங்குவதற்காக இருவருக்கு உதவி வழங்கப்பட்டது. பல சிறுருக்குப் பள்ளிக்கூடப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தோம்.

### இல்லத் தரிசனைகள் :

வாரந்தோறும் வறியவர்களின் இல்லங்களைத் தரிசித்து ஆன்ம சரீர சம்பந்தமான நன்மதிகள் உரைத்து வேண்டிய உதவிகளும் புரிந்தோம். இவ்வித தரிசனைகளின் தொகை 2750.

### நோயாளர் தரிசனையும் ஞானவாசினையும் :

இல்லங்களிலும் வைத்தியசாலையிலும் 813 நோயாளரைத் தரிசித்து ஆறுதல் புரிந்ததோடு அவசியமான தருணங்களில் அந்திம தேவதிரவிய அனுமானங்களைப் பெறவும் அவர்களுக்கு உதவினேம். இவர்களுக்கும் வேறு பேருக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாதுகாவலன் பத்திரிகைகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் எமது நன்றிக்குரியவர்களான ஐரோப்பிய, அமெரிக்க உபகாரிகள் அனுப்பி வருகிற ஆங்கில சஞ்சிகைகள் பிரசுரங்களும் வேறுபல பத்திரங்களும் ஏராளமாகப் பரப்பப்பட்டன. மக்களிடையே ஞானவாசினைப்பற்று அருகி வருவதினுலாக்கும் எமது இலவச் இரவற் புத்தகசாலை தற்போது தொழிற்படாதிருக்கிறது.

### நன்றியுரை :

மிகுந்த கரிசனையுடன் எமது தருமசபையைப் பரிபாலித்தும், வேண்டிய உதவிகள் புரிந்தும் வருகிறவர்களான அதிவந். ஆயர், துணை ஆயருக்கும், பேராற்றலுடன் எமைவழி நடாத்தும் ஆன்ம இயக்குனர் அதிவண. ஜே. புரேகான் அடிகளாருக்கும், வண. பங்குத்தந்தையர்களுக்கும் கௌரவதனிச் சங்கத் தலைவர் உறுப்பினர்களுக்கும், உபகாரிகள், அபிமானிகள், நண்பர்களுக்கும் எமது தாழ்மைமிக்க — இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

ஈற்றிலே, எம்மெல்லோரையும் பராமரித்து எமக்கு வேண்டிய இகபர நலன்களையெல்லாம் நிறைகரமாய்ப் பொழிந்து வருகிறவரான எல்லாம்வல்ல இறைவனை நெஞ்சார வாழ்த்தித் துதிக்கின்றேம், வணக்கம்.

புனிதர் சூசையப்பர்பந்தியின் காரிய அங்கத்தவர்கள் சார்பில்

**அ. பி. முத்தையா**
தலைவர்.

**கொ: அந்தோனிமுத்து**
காரியதரிசி.


இலங்கைப் பாடசாலைகளில் பாவிக்கப்படும் வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பெற்ற

1972-ம் ஆண்டிற்கான

# கத்தோலிக்க மறைக்கல்வித் தமிழ்ப்பாட நூல்கள்

| வகுப்புகள் | பாடநூல்கள் | பாகம் | விலை |
|---|---|---|---|
| 2ஆம் வகுப்பு | நமதுவழித் தொடர்ச்சி | 1-ம் பாகம் | 2-50 |
| 3ஆம் வகுப்பு | நமது வழித்தொடர்ச்சி | 2-ம் பாகம் | 1-50 |
| 4ஆம் வகுப்பு | நமது வழித் தொடர்ச்சி | 3-ம் பாகம் | 2-50 |
| | அன்பின் ஆட்சி (அச்சில்) | 1-ம் பாகம் | 75 |
| 5ஆம் வகுப்பு | நமது வழித்தொடர்ச்சி | 4-ம் பாகம் | 2-50 |
| | அன்பின் ஆட்சி | 2-ம் பாகம் | 75 |
| 6ஆம் வகுப்பு | வாழ்வும் வழியும் ... ... | 1-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபைச் சரித்திரம் பிரதான சம்பவங்கள் உட்பட ... ... ... ... | | 1-30 |
| 7ஆம் வகுப்பு | வாழ்வும் வழியும் ... ... | 2-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் போர்த்துக்கேயர் காலம் — 1505—1658 உட்பட ... ... | | 1-30 |
| 8-ஆம் வகுப்பு (J. S. C.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் | 1-ம் பாகமும் | |
| | அனுபந்தம் — திருச்சபையின் இலங்கைச் சரித்திரம் ஒல்லாந்தர் காலம் 1658 — 1796 உட்பட ... ... | | 1-30 |
| 9ஆம் வகுப்பு (Prep S.S.C.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் ... | 2-ம் பாகம் | 1-50 |
| 10ஆம் வகுப்பு (G. C. E.) | கத்தோலிக்க திருமறை விளக்கம் | 3-ம், 4-ம் பாகம் | 1-50 |
| | லூக்காஸ் சுவிசேஷம் ... ... | ... | ... |

கிடைக்குமிடம் :

அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.


* * *

1972-ம் ஆண்டு இறுதியில் யாழ். மறைமாவட்டத்தில் எல்லா வகுப்புகளுக்கும் மேற்படி பாடநூல்களைத் தழுவி மறைக்கல்விப் பரீட்சை நடைபெறும்.

அருட்திரு ஜி. ரி. பாலசுந்தரம், ஓ. எம். ஐ.
யாழ். மறைமாவட்ட
மறைக்கல்வி மேலாளர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆனி மாதம் 17-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org